இலங்கையின் பிரித்தானியர் அதிகாரத்தை நிலைநாட்டல்

அலகுபரீட்சை – 02

நா.பிரகாஸ் B.A **வரலாறு** **1 மணித்தியாலம்**

பகுதி-i

1. இலங்கை முழுவதையும் கைப்பற்றி 133 வருடங்கள் அரசியல் , சமூக, பொருளாதாரத்தில் தாக்கங்களை ஏற்படுத்திய ஐரோப்பிய இனத்தவர்.
   1) போர்த்துக்கயர் 3) பிரான்சியர்
   2) ஒல்லாந்தர் 4) பிரித்தானியர்

2. பிரித்தானியர் முதன் முதலில் கைப்பற்றிய கரையோரப் பகுதிகளில் ஒன்று
   1) காலி 3)யாழ்ப்பாணம்
   2) திருகோணமலை 4) மட்டக்களப்பு

3. இந்தியாவில் பிரான்சியரால் கைப்பற்றப்படாத கோட்டைகளை இடங்களில் ஒன்றாக அமைவது.
   1) சென்னை 3) காரைக்கால்
   2) பண்டிச்சேரி 4) சந்திரநகர்

4. கி.பி 1762 ஆம் ஆண்டு இலங்கை வந்து கண்டி மன்னன் கீர்த்திஸ்ரீ இராஜசிங்கனை சந்தித்த பிரித்தானிய தூதுவர்.
   1) ஹியூ பொயிட் 3) ஜோன் பைபஸ்
   2) றொபட் அன்றூஸ் 4) ஜோன் டொயிலி

5. பிரான்ஸ் ஒல்லாந்து நாட்டை கைப்பற்றியதால் பிரித்தானியாவிடம் தஞ்சமடைந்த ஒல்லாந் மன்னன்
   1) 5ம் வில்லியம் 3) 4ம் வில்லியம்
   2) 2ம் வில்லியம் 4) 5ம் ஒரேஞ் வில்லியம்

6. பிரித்தானியர் இலங்கைக்கு வரும் போது இலங்கையில் இருந்த இறுதி ஒல்லாந்த ஆளுநர்.
   1) பன் எங்கல் பெக் 3) விலகம் பெக்
   2) பெரன் வன் எக் 4) ஸ்பில் பேர்ஜன்

7. 1797 கரையோர கிளர்ச்சிக்கான காரணங்களை ஆராயவும் அக் கிளர்ச்சியை அடக்கவும் இலங்கைக்கு யார் தலமையில் குழு அனுப்பப்பட்டது.
   1) சோல்பரி குழு 3) டி. மியூரன் குழு
   2) மக்கலம் குழு 4) பிரட்றிக் நோர்த்

8. இலங்கைக்கு பிரித்தானியர் ஆட்சியில் தெரிவு செய்யப்பட்ட முதலாவது பிரித்தானிய ஆளுநர்.
   1) பிறட்டிக்நோத் 3) தோமஸ் மெயிட்லன்
   2) றொபட் பிறௌன்றிக் 4) ஜோன் டொயிலி

9. 1803 ஆம் ஆண்டு பிறட்டிக்நோத் கண்டி மீது படையெடுத்த போது கண்டியில் ஆட்சி புரிந்த மன்னன்.
   1) இராஜாதி இராஜசிங்கன் 3) ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன்
   2) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் 4) 1ம் விமலதர்ம சூரியன்

www.kedu.lk


LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk
LEARN EASY
KNOWLEDGE IS POWER
மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்
zoom
ICT
Maths
English
Commerce
Tamil
History
Science
Sinhala
இன்னும் பல
தரம்
01-A/L
Medium
தமிழ்/ English
76667-4945
தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன
www.learneasy.lk || www.lkedu.lk

10. 1803 ஆம் ஆண்டு பின்வருவனவற்றில் யார் தலைமையில் படையெடுப்பு மேற்கொள்ளப்பட்டது.
1) பிலிப்த ஒலிவ்வேரா
2) மெடக்டோவல்
3) தொன் ஜெரனி மோதஅசவேது
4) தியாகு த மெல்லோ

11. தோமஸ் மெயிட்ல்ன்ட் காலம் கண்டி இராச்சியத்துக்கு சிவில் உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டவர்.
1) ஜோன் டொயிலி
2) றொபட் அன்றூஸ்
3) மெக்டோவல்
4) கியூபொயிட்

12. 1815 ஆம் ஆண்டு கண்டி இராச்சியத்தை கைப்பற்றிய பிரித்தானிய ஆளுநர்.
1) தோமஸ் மெயிடல்ன்ட்
2) றொபட் பிறெளன்றிக்
3) பிறட்டிக்நோர்த்
4) ஜோன் டொயிலி

13. பின்வரும் நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தும் போது சரியாக அமையும் விடையை தெரிக
A- மன்னராட்சி இல்லாமல் போனமை
B- கரையோரம் கைப்பற்றப்படல்
C- கண்டி உடன்படிக்கை ஏற்படுத்தல்
D- தளபதி மெக்டோவல் தலைமையிலான படையெடுப்பு
1) ACBD 2) BACD 3) BDCA 4) CBAD

14. ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் மன்னராவதற்கு உதவிய பிரதானி.
1) எஹலபொல
2) பிலிமத்தலாவ
3) கெப்பட்டிபொல
4) மடுகல்ல

15. கண்டி ஒப்பந்தம் கைச்சாத்திட முன்பு ஏற்றப்பட்ட பிரித்தானிய கொடியை இறக்கி சிங்கள கொடியை ஏற்றியவர்.
1) வாரியபொல ஸ்ரீசுமங்கல தேரர்
2) தர்மலோக தேரர்
3) குணானந்த தேரர்
4) கரத்தோட்ட தர்மராம பிக்கு

A- வெல்லஸ்ஸ பகுதிக்கு ஹஜ்ஜி மரிக்கர் நியமிக்கப்படல்.
B- அதிக வரி அறவிடப்படல்

16. 1818 ஆம் ஆண்டு 1வது சுதந்திர போருடன் தொடர்புடைய கூற்று.
1) A,B உண்மையானது
2) Aஉண்மை Bஉண்மையற்றது
3) A,B உண்மையற்றது
4) Aஉண்மையற்றது Bஉண்மையானது

17. 1848 ஆம் ஆண்டு 2வது சுதந்திர போருடன் தொடர்புடைய கூற்று.
1) A,B உண்மையானது
2) Aஉண்மை Bஉண்மையற்றது
3) A,B உண்மையற்றது
4) Aஉண்மையற்றது Bஉண்மையானது

18. 1848ம் ஆண்டு 2வது சுதந்திரப் போரில் ஈடுபட்ட தலைவர்களில் ஒருவராக காணப்படுபவர்.
1) மடுகல்ல
2) பிலிமத்தலாவ
3) வீரபுரன் அப்பு
4) எகலபொல

www.lkedu.lk

19. கோப்பி பயிற்செய்கை ஏற்பட்ட வீழ்ச்சியை ஈடுசெய்ய புதிய வரிகளை அறிமுகப்படுத்திய ஆளுநர்.

1) டொரிங்டன்
2) ஸ்ருவட் மெக்கன்சி
3) பிறட்டிக்நோத்
4) றொபட் பிறௌன்றிக்

20. 2வது சுதந்திரப் போரில் ஸ்ரீ விக்கிரம சர்வசித்தி இராஜசிங்க எனும் பெயரில் அரசனானவன்.

1) வீரபுரன் அப்பு
2) கொங்காலே கொட பண்டரா
3) மடுகல்ல
4) எகலபொல

பகுதி –ii

❖ பின்வரும் வினாக்களுள் எல்லாவற்றுக்கும் விடை எழுதுக.

1) i. பின்வரும் இடங்களை இலங்கைப்படத்தில் குறிக்குக.
திருகோணமலை , யாழ்ப்பாணம் , மன்னார் , கற்பிட்டி , மட்டக்களப்பு , கொழும்பு , காலி ,கண்டி

ii. பின்வரும் படங்களை அவதானித்து வினவப்பட்ட வினாக்களின் விடைகளை ஒழுங்கு முறையில் குறிப்பிடுக.

A.



1. அருகில் காணப்படும் நபர் யார்.
2. அவர் எவ்வம்சத்தை சேர்ந்தவர்
3. இவர் மன்னனாக வர உதவிய பிரதானி
4. இவர் ஆட்சி செய்த இராசதானி எது.

B.



1. அருகில் காணப்படும் நபர் யார்.
2. இவர் எச்சுதந்திர போருடன் தொடர்பு பட்டவர்.
3. இவரால் மன்னனாக பிரகடனப்படுத்தப்பட்டவர்.
4. இவரோடு தொடர்புடைய கலவரம் ஆரம்பமான இடம்.

www.lkedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

2) i. பின்வரும் ஐரோப்பிய இனத்தவர்களின் தலைநகரங்களை குறிப்பிடுக

A- போர்த்துக்கேயர்

B- ஒல்லாந்தர்

C- ஆங்கிலேயர்

ii. 1797 கரையோர கிளர்ச்சிக்கான காரணங்கள் 4 குறிப்பிடுக.

iii. பிரித்தானியர் இலங்கை கைப்பற்ற முற்பட்டமைக்கான காரணங்களை குறிப்பிட்டு விளக்குக.

iv. 1803ஆம் ஆண்டு பிறட்ரிக் நோர்த் கண்டி இராச்சியம் மீது படையெடுக்க காரணங்கள் மூன்று குறிப்பிட்டு விளக்குக.

3) i. 1வது சுதந்திர போருடன் தொடர்புடைய போராட்ட தலைவர்களை மூவரை குறிப்பிடுக.

ii. 1818 1வது சுதந்திர போர் தோல்வி அடைவதற்கான காரணங்களைக் குறிப்பிடுக.

iii. பிரித்தானியர் கண்டி இராச்சியத்தை 1815 ஆம் ஆண்டு கைப்பற்றியமைக்கான காரணங்கள் இரண்டு குறிப்பிட்டு விளக்குக.

iv.1848 சுதந்திர போர் ஏற்படுவதற்கான காரணங்கள் மூன்று குறிப்பிட்டு விளக்குக.

www.lkedu.lk